# தமிழ் அறிஞர்களும்  தமிழ்த் தொண்டும் - நாடகக்கலை, இசைக்கலை

## நாடகக்கலை

**நாடகம் – பொருள் விளக்கம்:**

நாடு + அகம் = நாடகம்
நாட்டை அகத்துள் கொண்டது நாடகம்.
நாட்டின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால், நாடகம் எனப் பெயர் பெற்றது.
நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி என்பது முற்றிலும் பொருந்தும்.
கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டுவதும், கூத்தாக ஆடிக்காட்டுவதும் நாடகம் என்பர்.
இதற்குக் கூத்துக்கலை என்னும் பெயர் உண்டு.

**நாடகக்கலையின் தோற்றமும் வளர்ச்சியும்:**

தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம்.
நாடகம் என்பது “போலச் செய்தல்” என்னும் பண்பு அடிப்படையாக கொண்டது.
பிறர் செய்வதைப்போல தாமும் செய்து பார்க்க வேண்டும் என்ற மனித உணர்சித்தான் நாடகம் தோன்றக் காரணம்.
மரப்பாவைக்கூத்து->பொம்மலாட்டம்->தோல்பாவைக்கூத்து->நிழற்பாவைக்கூத்து என வளர்ச்சி அடைந்தது.

**இலக்கியங்களில் நாடகம்:**

தொல்காப்பிய மெய்பாட்டியல் நாடகப்பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்துள்ளது.
“கூத்தாட் டவைக்குல்லாத் தற்றே” என்னும் குறள் வழியாக நாடக அரங்கம் இருந்த செய்தி அறியலாம்.
சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், “நாடகமேத்தும் நாடகக் கணிகை” என்று மாதவியை குறிப்பிடுகிறார்.

**கூத்து:**

தனிப்பாடல்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடுவதை நாட்டியம் என்றும், ஏதேனும் ஒரு கதையை தழுவி வேடம் புனைந்து ஆடுவதை நாடகம் என்றும் குறிப்பிட்டு வந்துள்ளார்.
நாட்டியம், நாடகம் இரண்டிற்கும் பொதுவாகக் “கூத்து” என்ற சொல்லே வழக்கில் இருந்தது.

**அடியார்க்கு நல்லார்:**

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர்.
இவர் கூத்துவகைகளைப் பற்றியும், நாடகநூல்கள் பற்றியும் தமது உரையில் கூறியுள்ளார்.

**நாடக நூல்கள்:**

முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்து நூல் முதலிய பல நாடக நூல்கள் நாடகத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது.
**நாடகவியல்:**

பரிதிமாற்கலைஞர், செய்யுள் வடிவில் இயற்றிய தம் நாடகவியல் எனும் நூலில் நாடகம் அதன் விளக்கம், வகைகள், எழுதப்பட வேண்டிய முறைகள் பற்றி கூறியுள்ளார்.

**நாடக ஆராய்ச்சி நூல்கள்:**

சுவாமி விபுலானந்தர் = மதங்க சூளாமணி
மறைமலையடிகள் = சாகுந்தலம்
இவ்விரண்டு நூல்களும் நாடகம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்.

**தொழில்முறை நாடக அரங்குகள்:**

பம்மல் சம்பந்தனார், “நாடகத்தமிழ்” என்ற தம் நூலில் தொழில் முறை நாடக அரங்குகளைப்பற்றிய செய்திகளை நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார்.

**காலம்தோறும் நாடகக்கலை:**

ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் “மத்தவிலாசம்” என்ற நாடக நூலை எழுதியுள்ளான்.
பதினொன்றாம் நூற்றாண்டில் இராசராசசோழன் ஆட்சிக் காலத்தில் “இராசராசேச்சுவர நாடகம்” நடைபெற்றதாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.
நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் குறவஞ்சி நாடகம் தோன்றின.
பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நொண்டி நாடகம் தோன்றின.

**கட்டியங்காரன் உரையாடல்:**

பதினெட்டாம் நூற்றாண்டில் அருணாச்சலக் கவிராயரின் இராம நாடகம், கோபால கிருட்டின பாரதியின் நந்தனார் சரித்திரம் ஆகியன கட்டியங்காரன் உரையாடலோடு முழுவதும் பாடல்களாக அமைந்தன.

**சமுதாய சீர்திருத்த நாடகங்கள்:**

காசி விஸ்வநாதரின் “டம்பாச்சாரி விலாசம்”.
பேராசிரியர் சுந்தரனாரின் “மனோன்மணியம்”.

**தேசிய நாடகங்கள்:**

“கதரின் வெற்றி” நாடகம் தான் தமிழ்நாட்டில் முதன் முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகம்.
இதனைத் தொடர்ந்து தேசியக்கொடி, தேசபக்தி முதலிய நாடகங்கள் நடத்தப்பட்டன.

**சிறப்பிடம் பெற்றவர்கள்:**

பரிதிமாற் கலைஞர் - தமிழ் நாடக பேராசிரியர்
சங்கரதாசு சுவாமிகள் - தமிழ் நாடக உலகின் இமயமலை, தமிழ் நாடக பேராசிரியர்
பம்மல் சம்பந்தனார் - தமிழ் நாடக தந்தை
கந்தசாமி - தமிழ் நாடக மறுமலர்ச்சி தந்தை

**கவிமணியின் கூற்று:**

“நாடகச் சாலையொத்த நற்கலாசாலையொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து” என்ற கவிமணியின் கூற்றிற்குஏற்ப மக்களின் கண்ணை, செவியை, கருத்தைக் கவரும் வகையிலும் நாடகங்கள் கதை அழகோடு கவிதை அழகையும் கொண்டு வாழ்வைத் தூய்மைப்படுத்தும் வகையிலும் அமைதல் வேண்டும்.

## இசைக்கலை

இசை என்னும் சொல் “இயை” என்னும் வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியது
இசையானது “கந்தருவ வேதம்” என்று அழைக்கப்படும் சிறப்பினை உடையது
இன்னிசை, ஒத்திசை, தொகுப்பிசை என மூன்றாகப் பிரிப்பர்
ஒற்றைச் சுரங்கள் இனிமையாகச் சேர்வது இன்னிசை. இந்திய இசை இன்னிசை வகையைச் சேர்ந்தது
ஒத்த சுரங்களின் சுர அடுக்குகள் தம்முள் ஒத்திசைப்பது “ஒத்திசை” எனப்படும். மேலைநாட்டு இசை இந்த வகையைச் சார்ந்ததாகும்
ஒவ்வோர் சுரத்திற்கும் வேறோர் இணைச்சுரம் சேர்க்கப்பட்டு இரண்டும் ஒன்றாக இசைப்பது தொகுப்பிசை ஆகும்
இசையின் ஒலிக்குறிப்பு சுரம் எனப்படும்
சுரம் என்பதற்கு இனிமை உடையது என்று பொருள்
இசைத்தல் என்பதும் பொருள்
இசைத்தல் என்பதற்கு பொருந்துதல், ஒன்றாதல் என்று பொருள்
“இசையே புணர்ச்சி” என்பது தொல்க்காப்பிய உரியியல் நூற்பா
இந்தியாவில் இந்துஸ்தானி இசை, கருநாடக இசை என்ற இரு பிரிவுகள் உள்ளன

**சுரங்களின் பெயர்கள்:**

| பழந்தமிழ் நூல்கள் | சுரங்களின் பெயர்கள் | சுரக் குறியீடு |
|---|---|---|
| குரல் | சட்சம் | ச |
| துத்தம் | ரிஷபம் | ரி |
| கைக்கிளை | காந்தாரம் | க |
| உழை | மத்தியமம் | ம |
| இளி | பஞ்சமம் | ப |
| விளரி | தைவதம் | த |
| தாரம் | நிஷதம் | நி |

இவை ஏழு சுரங்கள் எனப்படும்
ஏழு சுரங்களும் ஒன்றைவிட மற்றது வலியது என்ற வரிசையில் ஒலிப்பது ஆரோசை (ஆரோகணம்) ஆகும்
ஏழு சுரங்களும் இறங்கு வரிசையில் ஒலிப்பது அமரோசை (அவரோகணம்) ஆகும்
சுரம் என்பதற்கு உரிய தமிழ்ச்சொல் “நரம்பு” என்பதாகும்
சுரங்கள் சேர்ந்தது “ராகம்” ஆகும்
ராகம் என்பதற்கு உரிய தமிழ்ச்சொல் “பண்” என்பதாகும்
இந்திய இசை ராகத்தை அடிப்படையாக கொண்டது
பூபாளம், முகாரி, நீலாம்பரி போன்ற பல ராகங்கள் உண்டு
விடியலில் பாட வேண்டிய ராகம் கேதாரம், தன்னியாசி
முற்பகலில் பாடவேண்டிய ராகம் சாவேரி, தேவமனோகரி
நண்பகலில் பாடவேண்டிய ராகம் ஸ்ரீராகம், மத்தியமாவதி
பிற்பகலில் பாடவேண்டிய ராகம் முகாரி, பேகடை
மாலையில் பாடவேண்டிய ராகம் கல்யாணி, வசந்தம்
எல்லா நேரங்களிலும் பாடப்படும் ராகம் பைரவி, சங்கராபரணம், காம்போதி, ஆரபி
தேவாரப்பாடல்களின் இசையைப் பகற்பண், இராப்பண், பொதுப்பண் என மூன்றாகப் பிரித்துள்ளனர்

**இசைக்கருவிகள்:**

உலகில் இசைக்கப்படும் எல்லா இசைக் கருவிகளும் அடிப்படையான இசைக்கருவிகள் எல்லாம் கிழக்கு நாடுகளில் தோன்றின
தமிழ்நாட்டில் இசைக்கருவிகளை நான்கு வகையாகப் பிரிப்பர்
1. தோல்கருவி 2. துளைக்கருவி 3. நரம்புக்கருவி 4. கஞ்சக்கருவி
கஞ்சக் கருவி என்பது உலோகக் கருவிகளைக் குறிக்கும்
தோல் கருவிகள் = பேரிகை, படகம், இடுக்கை, உடுக்கை, மத்தளம், சல்லி, கரடி
துளைக் கருவிகள் = வங்கியம், கொம்பு, தாரை, குழல், காளம், சங்கு
நரம்புக் கருவிகள் = யாழ, வீணை, கின்னரி
கஞ்சக் கருவிகள் = கைமணி, தாளம், கஞ்சதாளம், கொண்டி
பஞ்சமரபு என்ற பண்டைய இசைத்தமிழ் நூல் பாடகர் பாடுவது மிடற்றுக் கருவி எனக் கூறுகிறது
இன்று மேலைநாட்டு இசைக்கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன
முதல் சங்கத்தில் பெருநாரை, பெருகுருகு (முதுநாரை, முதுகுருகு) என்ற நூல்கள் இருந்தன
பெருநாரை என்பது இசைப்பற்றிய நூல், நரம்பு – நார் – நாரை
பெருகுருகு என்பது துணைக்கருவிகள் பற்றிய இசைநூல்
இடை சங்கத்தில் பேரிசை, சிற்றிசை என்ற இசைநூல்கள் இருந்தன
கடைச்சங்கத்தில் இசைமரபு, இசை நுணுக்கம், ஐந்தொகை அல்லது பஞ்சமரபு என்னும் இசை நூல்கள் இருந்தன
தொல்க்காப்பியம் தொடங்கி சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், நிகண்டுகள், சைவ, வைணவ நூல்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், உரை நூல்கள் என எல்லாவற்றிலும் இசைத்தமிழ் குறித்த, தமிழ் இசை குறித்த பல செய்திகள் இடம் பெற்றுள்ளன
அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் பஞ்ச பாரதீயம், பரத சேனாபதீயம், மதிவாணர் நாடகத்தமிழ், இசைநுணுக்கம், பஞ்சமரபு, தாளவகை ஒத்து என்ற இசை இலக்கண நூல்களைக் குறிப்பிட்டுள்ளனர்
ஐந்து திணைக்கும் உரிய “யாழ” குறித்து இலக்கண நூல்கள் கூறுகின்றன

**தமிழிசை வரலாறு:**

ஒவ்வொரு இனத்திற்கும் உரியதாய் ஓர் இசைமரபு இருக்கும். தமிழுக்கும் உரிய இசை மரபு தமிழிசை ஆகும்
“இசையோடு சிவணிய நரம்பின் மறைய என்மனார் புலவர்” என்கிறார் தொல்காப்பியர்
பரிபாடல் தூக்கு, வண்ணம் குறித்துக் கூறுகிறது
கலித்தொகையின் தாழிசை இசைப்பாட்டே
பாணரும் கூத்தரும் இசை வளர்த்த கலைஞர்களே ஆவர்
சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதை, கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவரி, குன்றக்குரவை பகுதிகள் இசைப் பற்றியன
களப்பிரர் காலத்தில் காரைக்கால் அம்மையாரின் திருவண்ணத்தந்தாதி போன்ற பதிகங்கள் இசையுடன் பாடப்பட்டன
பல்லவர் காலத்தில் மூவர் முதலிகள் தமிழ் இசையை நன்கு வளர்த்தனர்
நம்மாழ்வாரின் திருவாய்மொழி இசையை மேலும் வளர்த்தது
கொங்குவேள் மாக்கதையாகிய பெருங்கதை யாழிசை குறித்த பல செய்திகளைக் கூறுகிறது. உதயணன் இசைப்பாடி வென்று சுரமஞ்சரியை மணக்கிறான்
முதலாம் மகேந்திரவர்மனின் குடிமியான்மலைக் கல்வெட்டு இசைக் கல்வெட்டாகும்
பெரியபுராணத்தில் ஆனாயநாயனார் புராணத்தில் குழலிசை பற்றியும் திருநீலகண்ட அனாரின் புராணத்தில் யாழ்த்திறம் பற்றியும் குறிப்புகள் உள்ளன
திருவிளையாடல் புராணங்களில் அமைந்துள்ள சாதாரி பாடின திருவிளையாடல் விறகு விற்ற திருவிளையாடல் ஆகிய இசை பற்றியன
அருணகிரிநாதரின் திருப்புகழ்ப்பாடல்கள் தாளக் கலைக்கு வேதமாகத் திகழ்கிறது
தமிழிசையும் ஆரிய சங்கீதமும் கலந்து கர்நாடக சங்கீதம் தோன்றியது என்பர்
பண்டைய தமிழிசை கருநாடக சங்கீதமாக வழங்குகிறது என்று தண்டபாணி தேசிகர் போன்றோர் கருதுகின்றனர்
ராகத்தை முதன்மையாகக் கொண்டது சங்கீதங்கள்
சங்கீதத்தோடு பாட்டும் இணைந்தது சாகித்தியங்கள் ஆகும்
சீர்காழியில் பிறந்த முத்துத்தாண்டவர், மாரிமுத்துப்பிள்ளை, அருணாச்சலக்கவிராயர் ஆகிய மூவரும் தமிழ் பாடி தமிழிசை வளர்த்தனர்
இம்மொவரையும் “தமிழ் மூவர்” என்றும் “சீர்காழி மூவர்” என்றும் “கருநாடக சங்கீத ஆதி மும்மூர்த்திகள்” என்றும் போற்றுவர்
இம்மூவரே பல்லவி – அனுபல்லவி – சரணம் என்ற அமைப்பில் பாடும் பாடல் மரபைத் தோற்றுவித்தனர்
இம்மரபைப் பின் வந்த சங்கீத மும்மூர்த்திகள் பின்பற்றினர்
நாயக்கர் காலத்தில் தியாகையர், சியாமாசாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் மூவரும் கீர்த்தனைகள் பாடினர்
ஆபிரகாம் பண்டிதர் “கருணாமிர்த சாகரம்” என்ற நூலை இயற்றினார்
இலங்கையில் பிறந்த விபுலானந்த அடிகள் “யாழ் நூல்” இயற்றினார். வழக்கொழிந்து போன யாழ குறித்து ஆராய்ந்ததோடு “யாழ்” கருவியை செய்து அதனை மீட்டியும் காட்டினார்
அண்ணாமலை செட்டியார் தமிழிசைச் சங்கம் வைத்துத் தமிழிசையைக் காத்தார்
தண்டபாணி தேசிகர், சீர்காழி கோவிந்தராஜன் போன்றோர் தமிழ் இசைக்குப் பாடுபட்டனர்